# இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம், சங்ககிரி
# (சார்பு நீதிமன்றம், சங்ககிரி)

முன்னிலை : **திருமதி. S. உமா மகேஸ்வரி, B.A., L.L.M.,**
இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர் / சார்பு நீதிபதி, சங்ககிரி.

திருவள்ளுவராண்டு 2053, சுபகிருது வருடம், ஆனித்திங்கள் 9 ம் நாள் வியாழக்கிழமை
2022 ம் ஆண்டு ஜுன் திங்கள் 23 ம் நாள் வியாழக்கிழமை

**இ.வி.கோ.ம.எண். 190/2012**
**C.N.R. No: TNSA**07-000101-2012

அருண்*, த/பெ செல்லதுரை, (வயது 23)
காட்டூர், கமலாபுரம் அஞ்சல், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம்.
தற்போதைய முகவரி - வேலப்பன் கோவில் சாலை,
காகாபாளையம் அஞ்சல், சங்ககிரி வட்டம்,
சேலம் மாவட்டம். ..மனுதாரர்

* Amended as per order in IA No 1241/2018 dated 16.08.2018.

**/எதிராக/**

1. பாஸ்கரன், த/பெ வேலுசாமி,
   8, பிள்ளையார் கோவில் தெரு, நடராஜ்புரம் அஞ்சல்,
   நாமக்கல் மாவட்டம்.
2. மேலாண்மை இயக்குநர்,
   தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம் கிளை) லிமிடெட்,
   எண் - 12, இராமகிருஷ்னா சாலை, சேலம் - 7. ..எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 10.06.2022 தேதியன்று இறுதி விசாரணைக்கு வரப்பெற்று, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.கோபாலகிருஷ்ணன் அவர்களும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ராமானுஜம் அவர்களும் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாததாலும், தீர்ப்பாயத்தில் அழைத்த போது ஆஜராகாத காரணத்தினாலும் 1, 2 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், மனு, மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இந்நாள் வரையில் இந்த தீர்ப்பாயத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்ததுமான இம்மனுவில் இன்று இந்த தீர்ப்பாயம் ஆய்ந்து பிறப்பிக்கும்,

**உத்தரவு:-**

இம்மனு கடந்த 03.01.2012 ம் தேதி அன்று நடந்த சாலை விபத்தில், மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடாக ரூ.6,00,000/-ம், பின்வட்டி மற்றும் செலவுத்தொகை கோரி மோ.வா.சட்டம் பிரிவு 166 மற்றும் மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாய விதி 3-ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம் :**

கடந்த 03.01.2012 ம் தேதி மாலை 5.30 மணியளவில் மனுதாரர் பண்ணப்பட்டி பேருந்து நிறுத்ததிலிருந்து தனது வீட்டிற்கு செல்வதற்காக TN 30 N 0137 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தின் பின்புற சீட்டில் அமர்ந்து கொண்டு பயணம் செய்து கொண்டிருந்த போது, தின்னப்பட்டி - சேலம் மெயின் ரோட்டில் பண்ணப்பட்டி கிராமத்தில் உள்ள வாத்தியார்காடு என்ற இடத்தில் செல்லும் போது மேற்படி அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலை விதிகளை மதிக்காமலும் வேகத்தை குறைக்காமல் திடீரென்று வலதுபுறமாக திருப்பி விபத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், மேற்படி விபத்தில் மனுதாரருக்கு தலையில் பலத்த அடிபட்டு எலும்புகள் உடைந்துவிட்டதாகவும், உடனடியாக ஓமலூரில் அரசு மருத்துவமனையில் முதலுதவி பெற்றுக்கொண்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக சேலம் நியூரோ பவுண்டேசன் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாகவும், தனக்கு ஏற்பட்ட ஊனத்திற்கும், வருமான இழப்பிற்கும், உடல்வலி, மனவேதனை மருத்துவசெலவு ஆகியவற்றிற்கு ரூ.6,00,000/- இழப்பீடாக வழங்க வேண்டுமென மனுதாரரால் கோரப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அஞ்சல் அறிவிப்பையும், நீதிமன்ற அறிவிப்பையும் 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்ட பின்னரும், தீர்ப்பாயத்தில் அழைத்த போது ஆஜராகாத காரணத்தினாலும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.இராமானுஜம் அவர்கள் 04.10.2013ம் தேதி அன்று ஆஜராகியும், 21.07.2015ம் தேதி வரை எதிருரை தாக்கல் செய்யாததாலும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளனர்.

3. **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,**

1) இம்மனுவில் கூறப்பட்ட விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணம்?
2) விபத்திற்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்ட நபர் யார் ?
3) மனுதாரருக்கு அவர் கோரும் இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதா? ஆம் எனில் எவ்வளவு?

4. இம்மனுவில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிக்க மனுதாரர் தரப்பில் ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டும், ம.சா.ஆ.1 முதல் 7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகி விட்டதால் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>தீர்வுக்குரிய பிரச்சனை எண் :- 1</u>

இம்மனுவில் கூறப்பட்ட விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணம் என்ற பிரச்சினையைப்பற்றி ஆராய்கையில், மனுதாரர் தன்னுடைய மனுவிலும், முதல் விசாரணை சாட்சிய வாக்குமூலத்திலும் தான் சம்பவத்தன்று தனது பள்ளி அருகே உள்ள பண்ணப்பட்டி பேருந்து நிறுத்ததிலிருந்து தனது வீட்டிற்கு செல்வதற்காக TN 30 N 0137 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தின் பின்புற சீட்டில் அமர்ந்து கொண்டு பயணம் செய்து கொண்டிருந்த போது, தின்னப்பட்டி - சேலம் மெயின் ரோட்டில் பண்ணப்பட்டி கிராமத்தில் உள்ள வாத்தியார்காடு என்ற இடத்தில் செல்லும் போது மேற்படி அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலை விதிகளை மதிக்காமலும் வேகத்தை குறைக்காமல் திடீரென்று வலதுபுறமாக திருப்பி விபத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், மேற்படி விபத்தில் பின் இருக்கையில் இருந்த மனுதாரர் நிலைதடுமாறி கீழே விழுந்ததில் மனுதாரருக்கு தலையில் பலத்த அடிபட்டு எலும்புகள் உடைந்துவிட்டதாகவும், கூறியுள்ளார். மேற்படி விபத்து சம்பவத்தை உறுதிப்படுத்துவதற்காக 1ம் எதிர்மனுதாரரின் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை ம.சா.ஆ.1 ஆகவும், விபத்து பதிவேட்டு அறிக்கையை ம.சா.ஆ.3 ஆகவும் மனுதாரர் குறியீடு செய்துள்ளதாக மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதுரை முன் வைத்தார். ஆகவே, மேற்படி ஆவணங்களை பரிசீலிக்கையில் ம.சா.ஆ.1 ல் எதிரியாக TN 30 N 0137 வண்டியின் ஓட்டுநர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6. இந்நிலையில், எதிர்மனுதாரர்கள் தீர்ப்பாயத்தில் ஆஜராகி சம்பவ விபத்தை குறித்தோ, மனுதாரர் கட்சியை மறுத்தோ வழக்கினை நடத்த ஆஜராகவில்லை. எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகி உள்ளனர். ஆகவே மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் வழக்கு விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரரின் அதிவேக, அஜாக்கிரதையே என பிரச்சினை எண் 1ஐ பொறுத்து இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

7. <u>தீர்வுக்குரிய பிரச்சனை எண்: 2</u>

விபத்திற்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்ட நபர் யார் என்ற பிரச்சினையைப்பற்றி ஆராய்கையில், ஏற்கனவே 1ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதை விபத்திற்கு காரணம் என்று முடிவு செய்துள்ள நிலையில், 2ம் எதிர்மனுதாரரே அவரது ஓட்டுநரின் செயலான விபத்திற்கு முழு பொறுப்பாளர் ஆகின்றார். மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.4 பதிவு சான்றிலிருந்து 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த பேருந்து 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு சொந்தமானது என்பது தெரிய வருகிறது. 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் செயலை ஏற்று மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார். எனவே 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என இப்பிரச்சனை எண் 2க்கு இந்த தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

8. <u>தீர்வுக்குரிய பிரச்சனை எண்: 3</u>

மனுதாரருக்கு அவர் கோரும் இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதா? ஆம் எனில் எவ்வளவு என ஆராய்கையில் மனுதாரருக்கு விபத்து சமயத்தில் 17 வயது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், வயதை நிரூபிக்க தகுந்த சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. இருந்த போதிலும், மனுதாரரின் வயதை மறுத்து கட்சி எடுக்க எதிர்மனுதாரர்கள் இந்த தீர்ப்பாயத்தில் ஆஜராகவில்லை. மேலும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்களில் அவரது வயது 17 என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரின் வயது 17 என இந்த தீர்ப்பாயம் ஏற்றுக்கொள்கிறது. மனுதாரர் விபத்து சமயத்தில் பண்ணப்பட்டியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 11ம் வகுப்பு படித்து கொண்டிருந்ததாகவும், வீட்டில் பகுதி நேரமாக டைலர் வேலை செய்து மாதம் ரூ.3,000/- சம்பாதித்து வந்ததாகவும் மனுவிலும், ம.சா.1ன் சாட்சியத்திலும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே மனுதாரர் விபத்து சமயத்தில் படித்து கொண்டிருந்தார் என்பதை இந்த தீர்ப்பாயம் எடுத்துக்கொள்கிறது. மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு ஏற்பட்ட காய தன்மை, சிகிச்சைக்கான விபரங்களை காண்பிக்கும் வகையில் காய சான்று ம.சா.ஆ.2 ஆகவும், விபத்து பதிவேட்டு நகல் ம.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.2-ல் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் நான்கு என்றும், அதில் 2 முதல் 4 காயங்கள் கொடுங்காயம் என்றும், 1 வது காயம் சாதாரண காயம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் சேலம் நியூரோ பவுண்டேசன் மருத்துவமனையில் 03.01.2012 முதல் 07.01.2012 வரை உள்நோயாளியாக இருந்ததாக ம.சா.ஆ.6 மருத்துவமனை விடுவிப்பு குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகிறது. ஆகவே மனுதாரர் 4 நாட்கள் உள்நோயாளியாக இருந்து வந்துள்ளது தெரிய வருகிறது.

9. மனுதாரர் மருத்துவ குழுமத்திற்கு முன்பு ஆஜராகி பெற்ற ஊன சான்றானது இந்த தீர்ப்பாயத்திற்கு மருத்துவ குழுமத்தால் அனுப்பப்பட்டுள்ளது. ஊன சான்றானது மனுதாரரால் குறியீடு செய்யப்படவில்லை. இருந்த போதிலும், இம்மனுவானது இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மனுதாரரின் ஊனத்தை அளவை நிர்ணயிக்க வேண்டுமென்பதால், மேற்படி மருத்துவ குழுமத்தால் அனுப்பப்பட்ட ஊன சான்றை இந்த தீர்ப்பாயம் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்கிறது. மேற்படி ஊன சான்றில் மனுதாரருக்கு No disability என சான்று வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கொடுங்காயத்திற்கென ரூ.50,000/-ஐ இழப்பீடாக வழங்கலாம் என 2020 (1) TN MAC 51 "Adimoolam //Vs// Tamilnadu State Transport Corportation" என்ற வழக்கில் மாண்புமிகு மேலமை நீதிமன்றம் வழங்கிய உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவே மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்திற்கென ரூ.50,000/-ஐ இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

10. மனுதாரர் தனக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்கான இழப்பீட்டிற்கு ரூ.50,000/- கோரியுள்ளார். மனுதாரருக்கு தலையில் ஏற்பட்ட விபத்தினால், அவர் வாழ்நாள் முழுவதும் சிரமத்தை அனுபவிக்கும் சூழ்நிலையில் உள்ளதால், அவருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.20,000/- நியாயமான இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது. மனுதாரருக்கு விபத்தின் காரணமாக தலையில் காயம் ஏற்பட்டதால், சிகிச்சைக்காக மருத்துவமனை சென்று, வர ஏற்பட்ட போக்குவரத்து செலவினத்திற்காக ரூ.5,000/- இழப்பீடாக வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகின்றது. மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக அவர் ஊட்டச்சத்து மிக்க உணவு எடுத்திருக்க வேண்டியது அவசியம் என்பதால் ஊட்டச்சத்திற்காக ரூ.5,000/- இழப்பீடு பெற அருகதையுடையவர் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

11. மனுதாரர் சிகிச்சையின் போது மருந்துகள் வாங்கிய வகையில் மருத்துவ ரசீதுகளை ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்துள்ளார். ரூ.19,797/-ஐ கணக்கீட்டிற்காக ரூ.19,800/- என அறுதியிட்டு மருத்துவ செலவினத்திற்கு இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

12. ஆகவே, மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில் மனுதாரருக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீடு வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

**கணக்கீடு**

| | | |
|---|---|---|
| ஊன சதவீதத்திற்கான இழப்பீடு | ரூ. | 50,000.00 |
| வலி மற்றும் வேதனைக்கான இழப்பீடு | ரூ. | 20,000.00 |
| சிகிச்சையின் போது ஏற்பட்ட மருத்துவ செலவினம் | ரூ. | 19,800.00 |
| ஊட்டச்சத்து | ரூ. | 5,000.00 |
| போக்குவரத்து | ரூ. | 5,000.00 |
| மொத்தம் | ரூ. | 99,800.00 |

13. ஆகவே, விபத்தினால் ஏற்பட்ட இழப்பிற்கு மொத்த இழப்பீடாக ரூ.99,800/-ஐ 2 ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

14) இறுதியாக,

1. இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டும்,

2. மனுதாரருக்கு ரூ.99,800/-(ரூபாய் தொண்ணூற்றி ஒன்பதாயிரத்து எண்ணூறு மட்டும்)ஐ மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடாக 2 ம் எதிர்மனுதாரர் வழக்கு செலவுத்தொகையுடன் வழங்க வேண்டுமென்றும்,

3. மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

4. இந்த இழப்பீட்டு தொகைக்கு வழக்கு தாக்கல் நாள் முதல் **7.5%** வட்டி செலுத்த வேண்டுமென்றும், 2ம் எதிர்மனுதாரர் இந்த இழப்பீட்டு தொகையை இரண்டு மாதங்களுக்குள் சங்ககிரி சார்பு நீதிமன்றம், கணக்கு எண் : 36192330088, **IFSC** எண் **SBIN**0000994 என்ற வங்கி கணக்கில் **NEFT/RTGS** முறையில் நேரடி வங்கி மாற்றம் மூலம் செலுத்த வேண்டுமென்றும்,

5. 2ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்தவுடன் முழுத்தொகையை வட்டியுடன் சேர்த்து மனுதாரர் பெற்றுக்கொள்ளலாம் என்றும்,

6. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.6,480/- நிர்ணயிக்கப்பட்டும்,

7. இம்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யும் போது நீதிமன்ற கட்டணமாக ரூ.10/-ஐ மட்டும் செலுத்தியிருக்கிறார். மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்த இடைமனு எண் 817/2012 தாக்கல் செய்து உத்தரவு நாள் 28.03.2012ன் படி விலக்கு பெற்றிருப்பதால், மீதமுள்ள நீதிமன்ற கட்டணமான ரூ.362/-ஐ மனுதாரர் 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும்,

8. மனுதாரர் வங்கி கணக்கு விபரத்தை கொடுத்தவுடன் அவருக்கு சேர வேண்டிய தொகை அவர் வங்கி கணக்கில் செலுத்தி வைக்க வேண்டுமென்றும் உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிபொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு ஜுன் திங்கள் 23ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்/- S. உமா மகேஸ்வரி)
**இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,**
**(சார்பு நீதிபதி, சங்ககிரி)**

<u>மற்ற விபரங்கள்</u>

| | |
|---|---|
| மனு தாக்கலான தேதி | 21.03.2012 |
| உத்தரவு நாள் | 23.06.2022 |
| இழப்பீட்டுத்தொகை | ரூ.89,800/-(ரூபாய் எண்பத்தி ஒன்பதாயிரத்து எண்ணூறு மட்டும்) |
| வட்டி விகிதம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய காலம் | மனு தேதியான 21.03.2012 லிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை (தவறுகையினால் மனு தள்ளுபடி ஆகியிருந்த காலங்கள் தவிர்த்து) ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டி மற்றும் இம்மனுவின் செலவுத் |

| | |
|---|---|
| | தொகையும் சேர்த்து இன்றிலிருந்து 60 நாட்களுக்குள் சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும். |
| மொத்த நீதிமன்ற கட்டணம் | ரூ.372/- |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | ரூ.10/- |
| மனுதாரர்கள் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ.362/- |
| நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்கான காலம் | மனுதாரர்கள் இம்மனுவிற்காக செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணமான ரூ.362/-ஐ உத்தரவு தேதியான 23.06.2022 லிருந்து 15 நாட்கள் காலகெடுவிற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும். |
| அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை | ரூ.7,146/- |
| மனு தள்ளுபடியான காலம் ஏதேனும் உண்டா | இல்லை |

**<u>செலவுத்தொகைப் பட்டியல்</u>**

| மனுதாரர்கள் தரப்பு செலவுத் தொகை பட்டியல் | தொகை | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| நீதிமன்ற கட்டணம் | 372 | 00 |
| வக்காலத்து கட்டணம் | 5 | 00 |
| சான்றாவண கட்டணம் | 20 | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 6,480 | 00 |
| கட்டளை சார்வு கட்டணம் | 69 | 00 |
| எழுத்துக்கூலி | 200 | 00 |
| மொத்தம் | 7,146 | 00 |

(இம்மனுவின் செலவுத்தொகையான ரூ.7,146/-ஐ 2 ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

(ஒப்பம்/- S. உமா மகேஸ்வரி)
**இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,**
**(சார்பு நீதிபதி, சங்ககிரி)**

<u>இணைப்பு:-</u>

**(1) மனுதாரர்கள் தரப்பு சாட்சிப்பட்டியல்-**

ம.சா.1 .. திரு. அருண்

**(2) எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிப்பட்டியல் -** இல்லை

**(3) மனுதாரர்கள் தரப்பு சான்றாவணப்பட்டியல் -**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 .. | முதல் தகவல் அறிக்கை | - நகல் |
| ம.சா.ஆ.2 .. | காய சான்று | - நகல் |
| ம.சா.ஆ.3 .. | விபத்து பதிவேடு | - நகல் |
| ம.சா.ஆ.4 .. | பதிவு சான்று | - நகல் |
| ம.சா.ஆ.5 .. | மருத்துவ ரசீதுகள் | - அசல் |
| ம.சா.ஆ.6 .. | மருத்துவமனை விடுவிப்பு குறிப்பு | - அசல் |
| ம.சா.ஆ.7 .. | CT Scan | - அசல் |

**(4) எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணப்பட்டியல்** - இல்லை

(ஒப்பம்/- S. உமா மகேஸ்வரி)
**இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர்,**
**(சார்பு நீதிபதி, சங்ககிரி)**

<u>குறிப்பு:-</u>

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 11.05.2020 ம் தேதி Tr.C.M.P. Nos. 264 to 281 of 2020 M/s Cholamandalam MS General Insurance Company Limited //Vs// Mr.Ayyannar.S and Other என்ற வழக்கில் வழங்கிய உத்தரவுக்கிணங்க தனியாக தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் இந்த உத்தரவில் இணைக்கப்பட்டுள்ளன.